DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**S.T.C.No. 17/2024**

| Deposition of the | : | PW1 | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரெங்கராஜன் | Age | : | 65 |
| S/o | : | அழகர் | Occupation | : | BSNL பணி ஓய்வு |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 23rd day of January 2026.

**23.01.2026**

**குறுக்கு விசாரணை**

**(சாட்சி மனுதாக்கல் செய்யப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**1.** நானும் ஆஜர் எதிரியும் இராமநாதபுரத்தில் வெளிப்பட்டிணம் வசந்தம் நகர் பகுதியில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஒரே சமூதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் இருவர் குடும்பத்திற்கு நெருங்கிய உறவு என்றால் சரிதான். எதிரி முன்னால் ராணுவ வீரர் என்றால் சரிதான். அவர் பணி நிறைவு பெற்று வீட்டில் இருக்கிறார் என்றால் சரிதான். அவர் இராணுவத்தில் பணிபுரிந்தவர் என்பதால் பென்சன் வாங்கிகொண்டிருக்கிறார் என்றால் சரிதான். அவருக்கு ஒரு மகன் உண்டு என்றால் அது எனக்கு தெரியாது. அவருக்கு மகன் உள்ளார் அவரும் சம்பாதித்து வருகிறார். நான் BSNL பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ளேன். BSNL ல் டெக்னீசியனாக பணிபுரிந்து வந்தேன். பணி நிறைவடையும் போது தொகை ரூ. 22,00,000/-ம் வாங்கினேன். இந்த தொகையை நான் எந்த வங்கியில் போட்டு வைத்திருந்தேன் என்றால் ரூ. 22,00,000/-ம் நான் வீட்டில் வைத்திருந்தேன். நான் எந்த வங்கியிலிருந்து பணத்தை எடுத்தேன் என்றால் ஸ்டேட் பேங்கில் இருந்து எடுத்தேன். ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் இருந்து ரூ. 22,00,000/-த்தை எடுத்து வீட்டில் தான் வைத்திருந்தேன்.

**2.** பணம் எடுத்ததற்கு மற்றும் வைத்திருந்ததற்கு என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் ஆம். பணம் எடுத்தது வைத்தது பற்றிய விவரம் ஸ்டேட் பேங்க வங்கி கணக்கை பார்த்தால் தெரியும். என்னுடைய வங்கி கணக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியுமா என்றால் முடியும். நான் BSNL அலுவலகத்தில் இருக்கும் போது தொழிற்சங்கத்தில் பொருளாளராக இருந்தேன். நான் தொழிற்சங்கத்தில் பொருளாளராக இருந்த காரணத்தால் நான் எல்லா இடங்களிலும் செல்வாக்கை பயன்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான்

தொழிற்சங்கத்தில் பொருளாளராக இருந்ததால் எல்லா வங்கிகளுக்கும் தொடர்பு உண்டு என்றால் சரியல்ல. எதிரியும், நானும் சுமூகமாக பேசிய காலத்தில் எனக்கு வீடு கட்டுவதற்கு பணம் வேண்டும் என்று எதிரி என்னிடம் கேட்டார் என்றால் சரியல்ல. நான் எனக்கு தெரிந்த வங்கி உள்ளது வங்கி மூலமாக பணம் வாங்கிதருகிறேன் என்று உறுதியளித்தேன் என்றால் சரியல்ல.

3. உறுதியளித்ததால் தான் எனக்கு செக்யூரிட்டிகாக பூர்த்தி செய்யப்படாத எதிரி கணக்கு வைத்திருந்த ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கிளையில் செக்கை கேட்டேன் என்றால் சரியல்ல. அதன்பேரில் தான் தங்களை நம்பி எதிரியானவர் பூர்த்தி செய்யப்படாத ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா செக்கை தங்களிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. காசோலையை வாங்கிக்கொண்டு எதிரிக்கு வீடு கட்டுவதற்கு வங்கியிலிருந்து எந்தவிதமான தொகையும் பெற்றுக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உறுதியளித்ததின் பேரில் செக்கை வாங்கிக்கொடுக்குமாறு அல்லது பணத்தை வங்கியிலிருந்து பெற்றுத்தருமாறு எதிரி கேட்டார் என்றால் சரியல்ல. கடந்த 10.06.2013 ம் தேதி எதிரியும், எதிரியின் மனைவியும் எனது வீட்டிற்கு வந்து கேட்ட போது நானும், எனது மனைவியும் அவரை அடித்து துன்புறுத்தினோம் என்றால் சரியல்ல. முன்னாள் ராணுவ வீரர் என்றும் பாராமல் அவரை அடித்து துன்புறுத்தேன் என்றால் சரியல்ல. அவரை அடித்து காயப்படுத்தியதால் தான் என் மீது கேணிக்கரை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் புகார் கொடுத்தது உண்மை.

4. அந்த புகாரின் பேரில் காவல்நிலையத்தில் விசாரித்து பணத்தை வங்கியிலிருந்து வாங்கி கொடு அல்லது செக்கை கொடு என்று கூறினார்கள் என்றால் சரியல்ல. போலீசாரின் அறிவுறுத்தலின் பேரில் செக்கை திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று உறுதியளித்துவிட்டு செக்கை திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு அழைத்து என்னை துன்புறுத்திவிட்டார்கள் என்பதை மனதில் வைத்து தவறான தகவலை கூறி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் கேட்டார் கேட்ட தேதி ஞாபகம் இல்லை. கொடுத்த தேதி ஞாபகம் உள்ளது நான் எனது புகாரில் 10.08.2021 ம் தேதி கேட்ட தேதி அன்றே பணத்தை கொடுத்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக வாய்மொழியாக கேட்டார். அன்றைய தேதியில் எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் ரூ. 7,00,000/-ம் கொடுத்தேன். ரூ. 7,00,000/-ம் மொத்தமாக தொகையாகத்தான் கொடுத்தேன். ரூ. 7,00,000/- வீட்டில் தான் வைத்திருந்தேன் என்றால் சரிதான். ரூ. 7,00,000/-ல் 500 ரூ 14 கட்டுகள் கொடுத்தேன். அந்த பணத்தை கொஞ்ச கொஞ்சமாக வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தேன். என்னுடைய வங்கி கணக்கு விவரத்தை பார்த்தால் தெரிய வரும் என்றால் சரிதான்.

5. நான் சொல்வது போல் முழு தாள்களையும் நான் வீட்டில் தான் வைத்திருந்தேன் என்றால் சரிதான். இவ்வளவு தொகை வைப்பதற்கு எனக்கு எந்தவித நிதி ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி முன்னாள் இராணுவ

வீரர் என்பதால் அவர் மீது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் 3 வது பக்கம் 3 வது பத்தி எதிரி மகன் சாட்சி கையொப்பமிட்ட புரோ நோட் எதிரி கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மகன் கையெழுத்திட்டாரா மகள் கையெழுத்திட்டாரா என்று எனக்கு தெரியாது. புரோ நோட்டுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரூ. 5,00,000/−த்தை கொடுத்துவிட்டதும் எதிரியிடம் புரோ நோட்டை திரும்பி கொடுத்து விட்டேன் (சாட்சி தற்போது ரூ. 5,00,000/−ம் இல்லை என்றும் ரூ. 7,00,000/− காசோலை கொடுத்ததும் புரோ நோட்டை கொடுத்ததாக மாற்றி கூறுகிறார்). புரோ நோட்டுகளை திருப்பி தரவில்லை என்றால் சரியல்ல.

6. புரோ நோட்டுகள் 20.12.2021 ல் காசோலை கொடுத்த போது புரோ நோட்டை திருப்பி தந்துவிட்டேன். 10.08.2020 ல் இருந்து 20.12.2021 வரை புரோ நோட் என்னிடம் தான் இருந்தது என்றால் சரிதான். நான் அந்த புரோ நோட்டை வைத்து உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்க தொடுத்தேனா என்றால் இல்லை. புரோ நோட் அவர் எழுதிக்கொடுத்திருந்தால் நான் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கலாம் என்றால் ரூ. 7,00,000/− காசோலை கொடுத்ததும் புரோ நோட்டை கொடுத்துவிட்டேன். பணமும் வாங்கவில்லை, புரோ நோட்டும் எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி கையெழுத்திட்டு கொடுத்தாக சொல்லப்படும் ஒரிஜினர் செக் எங்கு உள்ளது என்றால் நீதிமன்றத்தில் உள்ளது. செக்கில் எந்த தேதி போடப்பட்டுள்ளது என்றால் 24.08.2023. செக்கில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் எதிரியுடைய கையெழுத்து. செக்கில் எண்ணாலும், எழுத்தாலும் அவரே தான் எழுதிக்கொடுத்தார். ரெங்கராஜன் என்று யார் எழுதினார் என்றால் அதுவும் எதிரி தான் எழுதினார்.

7. அதில் போடப்பட்டுள்ள கையெழுத்து மட்டும் தான் எதிரியுடையது மற்றது எழுதியது எல்லாம் நான் தான் எழுதினேன் என்றால் சரியல்ல. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில், பாரதிநகர் கிளையில் 23.08.2023 ல் கொடுக்கப்பட்டுள்ளதாக முத்திரையிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஒரிஜினல் செக்கில் குறிப்பிட்டுள்ள தேதிக்கு ஒரு நாளுக்கு முன்னதாகவே கொடுத்துவிட்டேன் என்றால் கொடுத்துவிட்டேன். பொதுவாக செக் கொடுத்த அன்றோ அல்லது அதற்கு பின்னரோ செக்கை வங்கியில் கொடுத்தால் தான் செக்கை கொடுத்து வங்கியில் வரவு வைக்க முடியும் என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் எல்லால் தெரிந்து தான் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.01.23 19:00:21 +0530